## கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியம் - 2010

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு அளிக்கப்பட்ட உச்ச அளவு தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய பதிவேடுகளை முறையாக பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு மிகை நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04:3 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்நிதிக்கூற்றுக்கள் 2012 யூலை 17 ஆம் திகதி அதாவது உரிய திகதிக்கு 16 மாதங்கள் பிந்தியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலிலான தாமதம் காரணமாக நிதியத்திற்குரிய 2010 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு அவதானிக்கப்பட்ட விடயங்கள் 2012 சனவரி 31 ஆம் திகதிய எனது அறிக்கையின் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவு சங்க பதிவாளருக்கம் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக கணக்குகள் தொடர்பான எனது அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| மோட்டார் சைக்கிள் கடன் தவணைப் பண அறவீடுகள் | 279,365 | 287,701 | 8,336 |
| நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி | 2,186,384 | 1,728,195 | 458,189 |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 02 சொத்துக் கணக்குகளிற்குரிய ரூபா 6,541,119 கூட்டுத்தொகையும் 05 பொறுப்புக் கணக்குகளிற்குரிய ரூபா 16,894,068 கூட்டுத்தொகையும் பல வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகளைத் தயாரிக்கையில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 558,419 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத 04 மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிராக காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவற்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு/ மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்குகளின் விபரம் | பெறுமதி | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத எழுத்து மூலச் சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன | 2,186,384 | நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| கூட்டுறவுச் சங்கக் கடன் | 236,117,752 | ரூபா 231,048,610 கூட்டுத்தொகையான மீதிகளுக்காக உறுதிப்படுத்தல்களும் ரூபா 111,337,242 கூட்டுத்தொகைக்கான காலப்பகுப்பாய்வும் |

105,834,441 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 16,116,583 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் ரூபா 52,222,689 தொகையான திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 47,324,940 ஆல் அதாவது 91% ஆல் குறைவடைந்திருந்தமை மற்றும் 2009 ஆம் ஆண்டில் ரூபா 2,481,358 தொகையான வேறு செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,918,642 ஆல் அதாவது 61% இனால் அதிகரித்தமை இந் நிதிவிளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2008 ஆம் ஆண்டின் கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து செயற்திட்டக் கடனாக இரு சங்கங்களுக்கு வட்டி அறவிடப்படாது ரூபா 19,849,750 தொகை வழங்கப்பட்டிருந்தது. இதில் ஒரு சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையினை 2012 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

**(அ) கடன் அறவீடு**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து பெற வேண்டிய கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து அறவிட வேண்டிய கடன் தொடர்பான பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| கால எல்லை (ஆண்டு) | வழங்கப்பட்ட கடன் தொகை | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 10 இற்கு மேலானவை | 27,500,000 | 11,942,219 |
| 05 ± 10 இற்கு இடையிலானவை | 10,000,000 | 9,166,667 |
| 01 ± 05 இற்கு இடையிலானவை | 26,419,038 | 17,919,038 |
| 01 இற்குக் குறைவானவை | 3,000,000 | 3,000,000 |
| | 66,919,038 | 42,027,924 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(I) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா 66,919,038 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இக் கடன்களில் ரூபா 42,027,924 தொகையான பணம் அதாவது 63% அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

(II) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் தொகையில் ரூபா 39,027,924 அதாவது 93% செயற்பாடற்ற கடனாகக் காணப்பட்டது.

(ii) திறைசேரி நிர்வாகக் கடன்

திறைசேரி நிர்வாகக் கடனாக வழங்கப்பட்டிருந்த ரூபா 450,000,000 கடன் தொகையில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதி ரூபா 90,749,041 தொகையும் இதற்குரிய நிலுவை வட்டியாகிய ரூபா 30,964,789 தொகையும் காணப்பட்டது. இக் கடன் தொகையையும் வட்டியையும் அறவிடப்பட வேண்டுமென கடந்த கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் இக் கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிகழ்ச்சித்திட்டத்தையும் செயற்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. வைபவ நடவடிக்கைகள் மேற்குறித்த கருப்பொருளுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கூட்டுறவு மிகை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த பணத்தை செலவிடுவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

ii. மேற்குறித்த மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 250,000 தொகை செலவின மதிப்பீட்டின் கீழ் செயற்படுத்தப்படுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த கரச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை மீளமைப்பதற்கு 2012 திசெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவுகள்

மிகை நிதியத்தில் செலவில் உள்ள பணம் 1974 சனவரி 10 ஆம் திகதிய இலங்கை அரசாங்கத்தின் 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 44(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளான ஆரம்ப சங்கங்களின் பங்குகளையும் நிலையான சொத்துக்களையும் கொள்வனவு செய்வதற்கு, கலைப்பாளருக்கு எதிரான வழக்குகளின் போது அவரது விடுவிப்பிற்காக செயற்படுவதற்காக நிதியளிப்பதற்கும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்காக உதவியளிப்பதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 2006 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கூட்டுறவு நூற்றாண்டு விழாச் செலவினம் தீர்க்கப்படுதல், பயிற்சிச் செயலமர்வுகள், கல்வி கருத்தரங்குகள், நூற்றாண்டு விழாக்கள் மற்றும் திணைக்களத்திற்கு அவசியமான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 2,941,990 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு 2012 திசெம்பர் 18 ஆம்

திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான தொகைகளுக்கும் இடையே பின்வரும் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 109,850,000 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்திற்கு ஒப்பாக உள்ளபடியான மொத்த வருமானம் ரூபா 96,407,751 ஆக அதாவது 87.77% ஆகக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 70,000,000 கூட்டுத்தொகையான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவினத்திற்கு ஒப்பாக உள்ளபடியான மொத்தச் செலவினம் ரூபா 102,504,483 ஆக அதாவது 146.43% ஆகக் காணப்பட்டது.

ஆகவே முகாமைத்துவத்தினால் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் ஆணையாளரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) நிலையான சொத்துக்கள்